என் மனத்துதித்தவனே தபோ
வனத்திருப்பவனே - என்
உளத்திலுனையொரு கணத்தில் நினைத்தால்
அனைத்தும் தருபவனே

சினத்தை வென்றவனே அறமெனும்
தனத்தில் நின்றவனே இந்த
ஜகத்தின் ஆண்டவனே இகபர
சுகத்தை தருபவனே

கிடைத்தற் கறியோனே சித்தலிங்க
மடத்தில் உறைவோனே எந்த
இடத்தும் இருப்போனே பவ ஸங்க்
கடத்தை அறுப்போனே

அப்பனுக்கு உபதேசம் செய்த ஞான
சுப்பனும் நீ தானோ
முப்பிடி அவலை முயன்று புசித்த கண்
அப்பனும் நீ தானோ

ஒப்பில மாமணியே நீ
இப்பவே வந்தருள்வாய்  உன்னை
எப்பவும் போற்றிடுவேன் என்

அப்பனே ஆண்டிடவா

விரித்த சடையுடன் கரித்தோல் உரித்துச்
சிரித்து நின்றவன் நீ பின் திரி
புரத்தை எரித்தாறு முகத்தை அருளி
என் மனத்தை பரித்தவன் நீ

என் மனத்தே புகுந்திடுவாய் உன்னிரு
பதத்தை யுகந்திடுவாய் அகமெனும்
மதத்தை ஓட்டிடுவாய் அம்பிகை
பதத்தை காட்டிடுவாய்

சித்தமிரங்காதா என்
பித்தமும் தெளியாதா
உத்தம குருநாதா ஆண்டிடும்
அத்தனே அருள் நீ தா

எந் நாட்டவரும் போற்ற
இந்நாட்டினில் அவதரித்தாய் என் மன
ஆட்டமதை நிறுத்தி மெய்ஞான
நாட்டமுறச் செய்வாய்

கிருத்திகையில் உதித்தவா என்னைத்

திருத்தி அமைக்க வந்தவா  மங்கள
புரிதனில் தோன்றியவா பணியும்
ஹரிதாஸனுக்கருள் செய்யவா